1974 மார்ச் 16]

திரு. க. மு. இராசகோபால்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கக்கூடாது.

திரு. க. மு. இராசகோபால்: நான் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிறேன். எனக்கு நீங்கள் வாய்ப்புக்கொடுக்கவில்லையே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்லிவிடட்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க.மு. இராசகோபால்.

திரு. க. மு. இராசகோபால்: நான் கேட்க விரும்பிய கேள்வி போய் விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 467, 468, 469 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

ஜீப்பு வண்டிகள் வாங்கல்.

* 389 வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) 1972–73 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து நமது மாநில அரசு எத்தனை ஜிப் மோட்டார்களை கோரியிருந்தது?

(இ) அவற்றில் இதுவரை எத்தனை கிடைத்துள்ளன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) and (இ): 1972-73-ம் ஆண்டில் மாநில அரசு துறைகள் உபயோகத்திற்காக சென்னை போக்கு வரத்து ஆணையர், 280 ஜீப்புக்களுக்கு புதுடில்லி வழங்கல் ஒருவகை செய்தல் தலைமை இயக்குநரிடம் தேவைப்பட்டியல் அனுப்பியிருந்தார். அதில் சனவரி 1974 வரை 273 ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, அந்த ஜீப்புகள் எந்தெந்த இலாக்காக்களுக்குக் கொடுக்கப்பட்டன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு ப. முத்துசாமி: தலைவரவர்களே, முன்பெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 4-வீல் டிரைவ் ஜீப்புகள் தான் தரப்பட்டன. இப்போது அப்படிப்பட்ட ஜீப்புகள் கொடுக்காத காரணத்தினால் பல இடங்களில் கிராமப் புறங்களில் நடைபெறும் வேலைவாய்ப்புத் திட்டங்களைப் பார்க்கும் நேரத்தில் காலதாமதம் ஆகிறது. காரணம், மலைப்பகுதி, மணற்பாகானங் பகுதிகளில் செல்ல முடியவில்லை. ஆகவே, முன்போலவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு 4-வீலர் ஜீப் தரஅரசு முன் வருமா?

[1974 மார்ச் 16

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் சாலைகளை மேம்படுத்தி இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக உண்டு.

திரு. ஏ.எம். இராஜா: தலைவாவர்களே, இப்போது பெட்ரோல் விலை எட்டிப் பிடிகக முடியாத நிலையில் சென்று கொண்டு இருப்பதால்—போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் இதை நன்றாக அறிவார்கள். நேற்று பேசுகிறபோது கூடச் சொல்லியிருக்கிறார்கள், அந்த எரி பொருளை மிச்சப்படுத்த யோசனை தெரிவிப்பவர்களுக்கு 1 லட்சம் பரிசு கொடுப்பதாகச் சொன்னார்கள்—அந்த ஜீப்புகளை வாங்குவதற்கு பதிலாக "மெடடோர் வேன்" போன்றவற்றை வாங்கிக்கொடுத்து, அந்த ஜிப்புகளையும் வாபஸ் பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஒரு காலத்தில் சாலைகள் எல்லாம் போடாத காலத்தில்—இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் வெள்ளைக்கார அதிகாரிகளுக்கு வாகனங்கள் கொடுக்க வேண்டுமென்பதற்காக—ஜீப் வண்டிகள் வாங்கப்பட்டன. ஆனால் இப்போது ஓரளவிற்குச் சாலை அமைப்புகள் எல்லா இடங்களிலும் ஏற்பட்டு இருப்பதால், இன்னும் அந்த ஜீப்புகளை வாங்கவேண்டுமா என்ற நிலையை அரசுத் துறை பரிசீலித்துக்கொண்டு வருகிறது. அதற்குப் பதிலாக கார், அல்லது வேன்கள் வாங்கிக் கொடுக்கலாமா என்பதைக் குறித்தும் பரிசீலனை நடந்து வருகிறது. மேலும், எந்த அளவுக்கு பெட்ரோலியப் பொருள்களை மிச்சப்படுத்தலாம் என்பதையும் அரசு ஆலோசித்துக்கொண்டு வருகிறது.

திரு எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, பெட்ரோல் பற்றாக்குறை இருக்கிற நேரத்தில் பல இலாக்காக்களில் ஜீப்புகள் குறிப்பிட்ட தேவைகளுக்கு மட்டுமல்லாமல் வேறு பல காரியங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, அதை நிறுத்த, பெட்ரோல் பற்றாக்குறையை எடுத்துக்காட்டி, குறிப்பிட்ட காரியங்களுக்குத்தான், இலாகா சேர்ந்த காரியங்களுக்குத்தான் ஜீப்புகள் பயன்படுத்தப்படவேண்டுமென்று எடுத்துக் காட்டி, இதனால் அதிகம் பெட்ரோல் செலவாகிறது என்பதையும் கருத்தில் கொண்டு, அதற்கான உறுதியான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்தின்படி ஏற்கெனவே அரசுத் துறை அதிகாரிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அதிலும் நிச்சயமாகச் சொந்த உபயோகத்திற்காகப் பயன்படுத்தக்கூடாது என்று ஏற்கெனவே விதி முறைகள் இருக்கின்றன.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் ரோடுகளை நல்ல முறையில் செப்பனிட்டு இருப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரோடுகள் நல்ல முறையில் செப்பனிடப்பட்டு இருந்தாலும், சில இடங்களில் ஆறுகளைக்

1974 மார்ச் 16]

கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. என்னுடைய பகுதியில் சில இடங்களில் வைகை அணையைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆற்று மணலில் 2 வீல் டிரைவ் ஜீப்கள் போக முடிவது இல்லை. ஆகவே, வைகைப் பகுதியில் இருக்கும் ஊராட்சிகளுக்கு மட்டும் 4 வீல் ஜீப்கள் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

முற்பகல், 10–00

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய தனிப்பட்ட நிலைமைகள் குறித்து நிச்சயமாகத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

மாயூரத்தில் பேருந்துப் பணிமனை.

* 390 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

மாயூரத்திலுள்ள சோழன் போக்குவரத்துக் கழகக் கிளைக்காக புதிய பணிமனைக் கட்டிடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகம் புதிய பணி மனையை மாயூரத்தில் கட்ட இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது எந்த இடத்தில் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதலில் தாற்காலிக ஷெட் ரூ. 25,400 செலவில் மாயூரத்தில் கட்டி, அந்தப் பணிமனையைத் துவக்குவதாக ஏற்பாடாகியிருக்கிறது.

Sale of eggs in Milk Depots.

* 470 *Q.*— THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to sell eggs at the Milk Kiosks in Madras City ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு கோழி வளர்ப்புக் கழகம் சென்னை மாநகரில் உள்ள 300 பால் விற்பனை நிலையங்களில் 21 விற்பனை நிலையங்களைத் தெரிந்தெடுத்து அவற்றின்மூலம் முட்டைகளை விற்பனை செய்து வருகிறது.